# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **222/ந/2017**

நாள் : **23/07/2019**

**திரு. P. கண்ணன், த/பெ. புள்ள கவுண்டர்,
56, பேட்டை சுண்ணாம்புக்காரத் தெரு,
நாமக்கல் – 670 001.** — **முறையீட்டு மனுதாரர்**

**திரு பாலசுப்ரமணியம்,
நகராட்சி ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி.** — **எதிர் மனுதாரர்**

நாமக்கல் மாவட்டம், பேட்டை சுண்ணாம்புக்காரத் தெரு, கதவிலக்கம் 56 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.கண்ணன் அவர்களின் 07.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.11.2017 அன்று பெறப்பட்டு 222/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு / கோரிக்கை குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலங்கள் மற்றும் அறிக்கைகள் பெறப்பட்டு, முறையே பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன :-

## ஆணை

நாமக்கல் மாவட்டம், பேட்டை சுண்ணாம்புக்காரத் தெரு, கதவிலக்கம் 56 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.கண்ணன் என்பவர், மேற்படி விலாசத்தில் தனது குடும்பத்தினருடன் தலைமுறை தலைமுறையாக வசித்து வருவதாகவும், சர்வே எண்.377/1 (வார்டு D, பிளாக் 4,T.S.NO.41–1B) ல் உள்ள சுமார் 2.35 எக்கர் பரப்பளவு உள்ள தனது விவசாய நிலத்திற்குள் நாமக்கல் நகராட்சி நிர்வாகம் நாமக்கல் நகரின் 70% கழிவு நீரை கடந்த 20 ஆண்டுகளாக கொண்டு வந்து விடுவதாகவும், அதனை ஆட்சேபித்து தானும் தனது பங்காளிகளும் நாமக்கல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், அவ்வழக்கை விசாரணை செய்த நாமக்கல் நீதிமன்றம், கழிவு நீரை தங்களது விவசாய நிலத்திற்குள் விடக்கூடாது என்றும் வேறு மாற்றுப்பாதையை குறிப்பிட்டு அதன்படி கழிவு நீரை மாற்றி விடுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், ஆனால் இன்று வரை நகராட்சி நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், இன்று வரை தங்களால் விவசாயம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும், விவசாய நிலத்தின் தன்மை மாறுபட்டு மேற்படி நிலங்கள் விவசாயம் செய்வதற்கு பயனற்றும், சுற்றுப்புறச் சுகாதாரம் சீர்கேடடைந்து தங்களது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்து நீதிமன்ற தீர்ப்பாணையை மதிக்காமல் அலட்சியமாக செயல்படும் ஆணையாளருக்கு ரூ.10,00,000/– அபராதம் விதித்து அதனை முதலமைச்சர் நிவாரண நிதியில் சேர்த்திடவும், நகராட்சி கழிவுநீர் தனது விவசாய நிலத்தில் செல்வதால் கடந்த 30 ஆண்டுகளாக தன்னால் விவசாயம் செய்ய இயலாத நிலை உள்ளதால் நஷ்ட ஈடாக தனக்கு ரூ.75,00,000/– எதிர் மனுதாரர் தருவதற்கும் மேலும், வழக்கு செலவு தொகையாக ரூ.25,000/– வழங்கவும் உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனு மீதான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு நாமக்கல் நகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவ 20.11.2017 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில் 05.07.2019 நாளிட்ட நாமக்கல் நகராட்சி ஆணையரின் அறிக்கை 15.07.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. அவ்வறிக்கையில், நாமக்கல் நகராட்சி 55.24 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட 39 வார்டுகளை உள்ளடக்கிய தேர்வுநிலை நகராட்சியாக தற்போது இயங்கி வருகிறதுதென்றும், 21.01.2011 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் அரசாணை எண்.22-ன் படி நாமக்கல் நகராட்சி அருகிலுள்ள 9 ஊராட்சிகள் நகராட்சியுடன் இணைக்கப் பட்டதென்றும், அதற்கு முன்பு இந்நகராட்சி 10.24 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நகராட்சியாக இயங்கிவந்தது எனவும், பழைய நகர பகுதியில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.377/1 கொசவம்பட்டி ஏரிக்கும் அப்பகுதியில் செல்லும் வாரிக்கும் நடுவே அமைந்துள்ளது என்றும், சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக நாமக்கல் நகராட்சி பஞ்சாயத்தாக இருந்த காலத்திலேயே மேற்கண்ட பகுதி வாயிலாகத்தான் நகரில் ஒரு பகுதியிலிருந்து வெளியேறும் மழைநீர் மற்றும் கழிவு நீர் இயற்கையாக பூமியின் புவி விசையின்படி வெளியேறி கொசவம்பட்டி ஏரியில் கலந்து வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்வாறு வெளியேறும் நீரினை மாற்று வழியில் கொசவம்பட்டி ஏரியில் சேகரமாகும் வண்ணம் மாற்றி அமைத்து கொசவம்பட்டி ஏரியில் சேகரமாகும் கழிவு நீரை தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுத்திகரிக்கும் வகையிலும் கொசவம்பட்டி ஏரியினை அழகிய சுற்றுலாத்தலமாக மாற்றம் செய்யவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய 29.10.2013 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.36979/2012/இ3-ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி மூலமாக தொழில்நுட்ப ஆலோசகர் நியமிக்கப்பட்டு தல ஆய்வுகள் மேற்கொண்டு ரூ.40.39 கோடி மதிப்பீட்டில் இறுதி வரைவு அறிக்கை (Draft final Report) சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அவ்வறிக்கைக்கு 27.06.2016 நாளிட்ட நகர் மன்ற தீர்மான எண்.610-ன் வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டதென்றும் அதன்பின் சில கூடுதல் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்படி கொசவம்பட்டி ஏரியினை மேம்படுத்த ரூ.40.91 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு 27.06.2014, 14.08.2014 மற்றும் 10.05.2017 நாட்களிட்ட அவ்வலுவலக கடிதம் ந.க.எண்.8420/2013/இ1-ன் வாயிலாக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதென்றும், அத்திட்டத்தினை பரிந்துரை செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 20.08.2014 நாளிட்ட நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக கடித எண்.வ2/14694/2014-ன் வாயிலாக அனுப்பப்பட்டதென்றும், மேற்படி திட்டத்திற்கான மானியத் தொகையினை ஆசிய வளர்ச்சி வங்கி நிதி Tranche-IV-இன் கீழ் அனுமதிக்க 10.05.2017 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.8420/2013/இ1-ன் வாயிலாக திட்ட இயக்குநர் சுற்றுலாத்துறை, சென்னை அவர்களுக்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது மேற்கண்ட பணியை மேற்கொள்ள போதிய நிதி ஒதுக்கீடு பெறப்படாததால் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசு பரிசீலித்து வருகிறதெனவும், மேற்படி திட்டம் நடைமுறைக்கு வந்தவுடன் மனுதாரரின் குறைபாடு களையப்படும் எனவும் நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மனுதாரரது முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நாமக்கல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.708/96-ன் மீதான 10.04.2000 நாளைய தீர்ப்பிற்கு பின்னர் எவ்வித மேல்முறையீடோ / வழக்கோ தொடரப்பட்டுள்ளதாகவோ அல்லது நிலுவையில் உள்ளதாகவோ இரு தரப்பினராலும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறான நிலையில் மேற்படி மாண்பமை நீதிமன்ற ஆணைகளை நடைமுறைப்படுத்திட நகராட்சியால் உரிய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

4. மேலும், தனி நபர் நிலத்தில் நகராட்சி கழிவு நீரை விடுவது என்பது பொதுமக்கள் நலனுக்காக செயல்படவேண்டிய நகராட்சியே பொதுமக்கள் நலனுக்கு எதிராக செயல்படுவது என்ற நிலையை நல்ல நிர்வாகமாக கருத முடியாது. இவ்வினத்தில் 40 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறான நிலை தொடர்ந்து வருகிறதென நகராட்சி ஆணையாளரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது பாராட்டத் தக்கதல்ல. மேலும், மாண்பமை நாமக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் விவசாய நிலத்தினுள் கழிவு நீரை விடுவதற்கு நகராட்சிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் மாற்று ஏற்பாடுகள் செய்யவும் குறிப்பான ஆணைகள் வழங்கப்பட்டும், பல ஆண்டுகளாக எவ்வித துரித நடவடிக்கையும், தீர்வும் எடுக்கப்படாமலிருப்பது கண்டனத்துக்குரியதாகும். எனவே, நாமக்கல் நகராட்சி ஆணையாளரால் குறிப்பிடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் துவக்கப்படும் வரை சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் பாதிக்கப்பட்ட மனுதாரர் நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு உரிய தற்காலிக மாற்று ஏற்பாடுகள் குறித்து கள ஆய்வு செய்து, பொதுமக்கள் கருத்தினைப் பெற்று தொழில்நுட்ப கருத்துக்களின் அடிப்படையில் சட்ட விதிகளுக்குட்பட்டு தக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 23–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. P. கண்ணன்,
56, பேட்டை சுண்ணாம்புக்காரத் தெரு,
நாமக்கல் – 670 001.

2. நகராட்சி ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி